**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 74/2024**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.வெங்கடாச்சலம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.பெருமாள்ராஜ்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், கீரனூர் காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 56 |
| | | | **Dated** | : | 08.07.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், கீரனூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2022ம் தேதி அம்பாத்துரை காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணியாற்றியபோது உதவி ஆய்வாளர் திரு.பெருமாள் என்பவர் அம்பாத்துரை காவல் நிலைய குற்ற எண்.146/2022, இ.த.ச.பிரிவுகள் 294(b), 353, 506(i) மற்றும் 6(b), 24(i) COTPA சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு இருந்த வழக்கினை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். வழக்கு சாட்சிகளை விசாரித்தபோது ஏற்கனவே உதவி ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

மேற்படி உதவி ஆய்வாளர் செய்த முதல் விசாரணையை உறுதி செய்து கொண்டு உதவி ஆய்வாளர் கைது செய்த நிலையத்தில் வைத்திருந்த ஆஜர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திவிட்டு, கைப்பற்றப்பட்ட புகையிலைப் பொருட்கள் குறித்து உதவி ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த படிவம் – 95 மூலமாக மேற்படி புகையிலைப் பொருட்களை நீதிமன்றத்தில் சமர்பித்தேன். படிவம் – 95 **அ.சா.ஆ.5**. பின்னர் மேற்படி பொருட்களை ஆய்விற்காக மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்காக நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் சமர்பித்து, நீதிமன்ற உத்தரவு பெற்று ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.6**.

பின்னர் 27.03.2023 ம் தேதி  தலைமை காவலர் திரு.செந்தில் குமார் என்பவரை விசாரித்து புகையிலைப் பொருட்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதை உறுதி செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேற்படி புகையிலைப் பொருட்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநரான திரு.கஜா மைதீன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7**. மேற்படி ஆய்வறிக்கையில் மேற்படி பொருட்களில் நிக்கோட்டின் இருப்பதாக சொல்லப்பட்டு இருந்தது.

பின்னர் முதல் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து 13.01.2024 ம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 353, 506(i), 328 மற்றும் 6(b), 24(i) COTPA சட்டத்தின்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடமானது திண்டுக்கல் – மதுரை தேசிய நெருஞ்சாலையின் அணுகுச்சாலையில் உள்ள கடை என்றால் சரிதான். மேற்படி கடை அம்பாத்துரை காவல் நிலையத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைக்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைக்கு அருகில் உள்ள கடைகள் மற்றும் வீடுகளில் உள்ள நபர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடத்தை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நேரில் பார்வையிட்டபோது பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்வையிட்டு இருந்தால் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து இருப்பேன் என்றும், அவ்வாறு இடத்தை பார்வையிடாததால் தான் மேற்படி ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அருகில் உள்ள யாரையும் சாட்சியாக காட்டவில்லை என்றால் சரியல்ல.

புகையிலைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே பள்ளிக்கூடமோ, கல்வி நிறுவனங்களோ இல்லை என்றால் சரிதான். பொருட்களை கைப்பற்றி 4 மாதம் கழித்துதான் ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் தற்போது அதற்கான காரணம் நினைவில் இல்லை. புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கின் ஆவணங்கள்

மற்றும் பொருட்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் காலதாமதமாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரியிடம் இருந்து புகையிலைப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் எதிரி மிரட்டவில்லை என்றும், பணி செய்யவிடாமல் தடுத்து தாக்கவில்லை என்றும், ஆபாச வார்த்தைகளால் திட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் புள்ளி விபர கணக்கிற்காக எதிரிமீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Taken down by me/before me in open court on 08.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.08 19:28:17 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.